**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 11.08.2025**
**OS. No. 52/2016**
**வழக்கு சாட்சி PW.4– ராமலிங்கம், த/பெ. உத்தமலிங்க செட்டியார்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>

1) எனது பூர்வீகம் ஜலகண்டாபுரம் என்றால் சரிதான். இவ்வழக்கின் பிரதிவாதிகளுக்கும் பூர்வீகம் ஜலகண்டாபுரம் என்றால் சரிதான். 2 முதல் 5 பிரதிவாதிகளின் தாத்தா பெயர் பழனிசாமி செட்டியார் என்றால் சரிதான். பழனிசாமி செட்டியாருக்கு இரு மனைவிகள் என்றால் சரிதான். முதல் மனைவியின் மகன் R.K.கந்தசாமி செட்டியார் என்றால் எனக்கு தெரியவில்லை. R.K.கந்தசாமி செட்டியாரின் வாரிசுகள் யார் என்று எனக்கு தெரியுமா என்றால் ஓர், இருவரை தெரியும் அவர்கள் பெயர் பழனிசாமி, நடராஜன் மற்றும் நாகமாணிக்கம் ஆகும். அ R.K.கந்தசாமி செட்டியாரின் வாரிசுகளில் நடராஜன் மட்டும் தான் உயிருடன் உள்ளார். பழனிசாமி செட்டியாரின் 2 வது மனைவியின் மூலம் பிறந்த குழந்தைகள் தான் நாகமாணிக்கம் மற்றும் கோபாலகிருஷ்ணன் என்றால் சரிதான்.

2) பழனிசாமி செட்டியாரின் சொத்துக்கள் அவரது முதல் மற்றும் இரண்டாம் மனைவியின் பிள்ளைகள் வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் இல்லை. பழனிசாமி செட்டியாருக்கு 1940 ம் வருடத்தில் ஒரு சுயார்ஜித கிரையம்மூலம் 4 சென்ட் நிலமும், வேறு சில சொத்துக்களும் உள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. பழனிசாமி செட்டியாருக்கும், அவரது வாரிசுகளுக்கும் என்னென்ன சொத்துக்கள் பூர்வீகமகாவும், சுயார்ஜிதம் மூலமாகவும் பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. பழனிசாமி செட்டியாரின் மகன் கந்தசாமி செட்டியார் அவர்களுக்கு எவ்வளவு நிலம் பூர்வீகமகாவும், சுயார்ஜிதம் மூலமாகவும் பாத்தியப்பட்டது என்றும், அதில் எவ்வளவு சொத்துக்களை விற்பனை செய்துள்ளார் என்றும் எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவருக்கு எவ்வளவு நிலம் பாத்தியப்பட்டது என்று தெரியாமலேயே

1975ல் விற்பனை செய்ததாக என் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

3) 1975ல் கந்தசாமி செட்டியார் நல்லமாளுக்கு விற்றதாக சொல்லும் கிரைய பத்திரத்தை நான் பார்த்துள்ளேனா என்றால் எனக்கு நினைவில்லை. நம்பெருமாள் கவுண்டர் மற்றும் அவரது மனைவி நல்லம்மாள், அவர்களது மகன் வெங்கடாஜலம் ஆகியோர் சேர்ந்து கிருஷ்ணசாமி செட்டியாருக்கு எவ்வளவு நிலம் விற்பனை செய்தார்கள் என்றால் 1.48 ஏக்கர் நிலம் விற்பனை செய்தார்கள். எந்த வருடம் விற்பனை செய்யப்பட்டது என்றால் 1988 ஆகும். தாவா சொத்து மற்றும் அதன் அருகிறலுள்ள நிலங்கள் பற்றி எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்திலிருந்து மேச்சேரி செட்டியார் மற்றும் குருநாத செட்டியார் ஆகியோர் நிலம் எங்கு உள்ளது என்றால் கூப்பிடும் தொலைவில் உள்ளது. தாவா சொத்திற்கு வடக்குபுறம் 2, 3 வீடுகள் தள்ளி அமைந்துள்ளது என்றால் சரிதான்.

4) தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 கிரைய ஆவணமானது நம்பெருமாள் கவுண்டர் மனைவி நல்லம்மாளுக்கு கந்தசாமி செட்டியார் மற்றும் அவர்களது வாரிசுகள் எழுதிக்கொடுத்தது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் கந்தசாமி செட்டியார் மற்றும் அவர்களது வாரிசுகளுக்கு அந்த சொத்துக்கள் எவ்வாறு பாத்தியப்பட்டது என்று எந்த குறிப்பும் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல, தங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. கந்தசாமி செட்டியாரின் தந்தை பழனிசாமி செட்டியாருக்கு பாத்தியப்பட்டு பூர்வீகமாக அவர்களது வாரிசுகளுக்கு வந்ததாக அர்த்தம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் 5 சொத்துக்கள் மற்றும் ஒரு கிணறு ஆகியவை சொத்து விவரத்தில் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். ச.எண்கள்.226/2, 226/5, 226/6, 226/8, 227/1 மற்றும் கிணறு ஆகியவைகள் தான் வா.சா.ஆ.9 கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5) மேற்கண்ட நிலங்கள் அனைத்தும் ஜலகண்டாபுரம் – ஆடையூர் ரோட்டில் துர்கத்து எல்லை மாரியம்மன் கோவிலுக்கு வடக்கே அமைந்துள்ளது. வா.சா.ஆ.9 ஆவணத்தில் ச.எண்கள்.226/2, 226/5, 226/6, 226/8 ஆகிய சொத்துக்களுக்கு போகவர வழிநடை துர்கத்து எல்லை மாரியம்மன் கோவில் மெயின்ரோட்டிலிருந்து மேற்குபுறம் அதாவது P.T.குருநாத செட்டி, மேச்சேரி செட்டி வகையறா வீடுகளுக்கு வடக்கிலும், கிழமேலாக செல்லும் பாதையை நீங்கள் போகவர உள்ள வழிநடை பாத்தியம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கண்ட வழித்தடத்தை தவிர வேறு எந்த தடமும் அந்த ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ச.எண்கள்.226/6, 227/1, 226/8 ஆகிய சொத்துக்களில் ஏதேனும் வழித்தடம் உள்ளதாக வா.சா.ஆ.9 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

6) வா.சா.ஆ.9 கிரைய ஆவணத்தை மூல ஆவணமாக வைத்து சொத்துக்களை கிருஷ்ணசாமி செட்டியார் மற்றும் அவரது மனைவி மற்றும் எனக்கும் விற்பனை செய்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். ச.எண்.226/8ல் உள்ள நிலத்தை கிருஷ்ணசாமி செட்டியார் என்பவர் லோகநாதன் என்பவருக்கு பவர் கொடுத்தார், நான் லோகநாதன் என்பவரிடமிருந்து கிரையம் பெற்றேன். வா.சா.ஆ.10 கிரைய ஆவணமானது கிருஷ்ணசாமி அவர்களுக்கு நம்பெருமாள் மற்றும் அவரது மனைவி நல்லம்மாள் ஆகியோர் இருவரும் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். அதில் வா.சா.ஆ.9 கிரைய ஆவணம் மூலம் கிரையம் பெற்ற ச.எண்கள்.226/2, 226/5, 226/6, 226/8, 227/1 ஆகியவற்றில் ச.எண்.227/1ஐ தவிர மற்ற சொத்துக்களிலுள்ள 1.48 ஏக்கர் நிலத்தை கிரையம் கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.10 ஆவணத்திலும் ச.எண்கள்.226/6, 227/1, 226/8 ஆகிய சொத்துக்களில் ஏதேனும் வழித்தடம் உள்ளதாக குறிப்பிட்டுள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.10 கிரைய ஆவணத்தில் எந்த பாதையையும் குறிப்பிடவில்ரலை என்றால் சரிதான். வா.சா.ஆ.10 கிரைய ஆவணத்தின் அடிப்படையில் ச.எண்.227/1ல் உள்ள 1320 சதுரடி மட்டும் நம்பெருமாள் மற்றும் அவரது மனைவி வைத்து கொண்டு மற்ற நிலங்களை விற்பனை செய்துவிட்டார்கள் என்றால் சரிதான். அதேதேதியில் ச.எண்.227/1ல் உள்ள

1320 சதுரடி நிலமும், அவர்களது அனுபவத்திலிருந்த 180 சதுரடி நிலத்தையும் சேர்த்து எனக்கு விற்பனை செய்துவிட்டார்கள்.

7) நம்பெருமாள் மற்றும அவரது மனைவிக்கு பாத்தியப்பட்ட 22 X 60 அடி நிலத்திற்கு அதிகமாக 30 X 60 அடியாக நான் அவர்களிடம் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான், அவர்களது அனுபவத்திலிருந்த நிலத்தையும் சேர்த்து எனக்கு விற்பனை செய்துள்ளார்கள். நான் கிரையம் பெற்ற வா.சா.ஆ.11 கிரைய ஆவணத்திலும் பாதை என்று எதையும் குறிப்பிட்டு காட்டவில்லை என்றால் சரிதான். ச.எண்.227/1 ஆனது ஆடையூர் மெயின்ரோட்டிற்கு மேற்குபுறமாக உள்ள நத்தம் நிலம் என்றால் சரிதான். அந்த நிலத்திற்கு என் பெயரிலோ கிருஷ்ணசாமி பெயரிலோ பட்டா இருந்ததா என்றால் அது நத்தம் நிலம் என்பதால் பட்டா எதுவும் வழங்கவில்லை, வீடு இருந்திருந்திருந்தால் பட்டா வழங்கியிருப்பார்கள்.

8) வா.சா.ஆ.11 கிரைய ஆவணத்தில் நான் கிரையம் பெற்ற சொத்தை எப்போது விற்றேன் என்றால் நான் அந்த சொத்தை விற்கவில்லை, 2008 ல் தடத்திற்காக பஞ்சாயத்திற்கு தானமாக கொடுத்துவிட்டேன். மேற்கண்ட கிரைய ஆவணத்தில் கிரையம் பெற்ற சொத்து என் அனுபவத்தில் இருந்ததா என்றால் கிரையம் பெற்றவுடன் சாரம் அமைத்து டீ கடைக்கு வாடகைக்கு விட்டுவிட்டேன். அதில் கண்ட சொத்திற்கு சக்குபந்தி தெரியுமா என்றால் வயதாகிவிட்டதால் மறந்துவிட்டேன். ச.எண்.227/1 க்கு மேற்குபுறம் அமைந்துள்ள ச.எண்.226/8A1 என்ற சொத்து பட்டா நிலம் என்றால் சரிதான். ச.எண்.227/1 க்கு மேற்குபுறம் யூனியன் டிச்–சிற்கு கிழக்காக இடையேயுள்ள நிலம் எனக்கு பாத்தியப்பட்டதில்லை என்றால் சரியல்ல, நான் தான் அதை கிருஷ்ணசாமி செட்டியாரிடமிருந்து கிரையம் பெற்றுள்ளேன். சுமார் 740 சதுரடி கிரையம் பெற்றுள்ளேன்.

9) அந்த 740 சதுரடிக்கு சக்குபந்தி தெரியுமா என்றால் தெரியும், ச.எண்.227/1 ல் நான் கிரையம் பெற்ற நிலத்திற்கு மேற்கு, மேற்படி சர்வே எண்ணில் விடப்பட்ட 20 அடி வீதிக்கு தெற்கு, நஞ்சுண்டன் கிரையம் பெற்ற நிலத்திற்கு கிழக்கு, கோவில்

நிலத்திற்கு வடக்கு ஆகும். நான் மேற்கண்ட சொத்தை கிரையம் பெற்றதற்கான கிரைய ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் வாதிகள் தாக்கல் செய்திருப்பார்கள். நான் சொல்வதுபோல் 740 சதுரடி நிலத்தை நான் கிரையம் பெற்ற ஆவணம் எதுவும் வாதிகள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 மற்றும் வா.சா.ஆ.10 ஆவணங்களில் இல்லாத வழித்தடத்தை நான் இருப்பதாக காட்டி, பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பட்டா நிலத்தை காண்பித்து மோசடியாக வாதிகளுக்கு கிரையம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல.

10) 27.09.2004 ம் தேதியில் லோகநாதன் மனைவியிடம் நான் கிரையம் வாங்கியதாக சொல்லும் 741.75 சதுரடி நிலத்தின் சக்குபந்தி அந்த ஆவணத்தில் மோசடியாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றும், அந்த சக்குபந்திக்குள் உள்ள இடமானது 1ம் பிரதிவாதியின் கணவர் மற்றும் 2 முதல் 5 பிரதிவாதிகளின் தந்தையார் பெயரில் பட்டா உள்ளது என்றால் சரியல்ல. அது அவரது இறப்பிற்கு பின்னிட்டு, 1 முதல் 5 பிரதிவாதிகளின் பெயரில் பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் அது கூட்டு பட்டாவாக உள்ளது, அதில் என் பெயரும் உள்ளது. நான் நாகமாணிக்கத்திடமும், அவர்களது வாரிசுகளிடமும் இருந்து எவ்வித நிலமும் கிரையம் பெறவில்லை என்றால் சரிதான். என்னுடைய முன் கிரையஸ்தரான கிருஷ்ணசாமி செட்டியாருக்கும், 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தை பஞ்சாயத்திற்கு கிரையம் கொடுக்கவோ உரிமையில்லை என்றால் சரியல்ல. ச.எண்.227/1 ல் நான் அனுபவத்தில் இருந்திருந்தால் நத்தம் நிலம் என்பதால் பட்டா பெற்றிருப்போம் என்றால் சரியல்ல.

11) நாங்கள் கிரையம் பெற்ற நிலம் யூனியன் டிச்சிற்கு மேற்காக உள்ளது என்றும், அதை பிளாட்டுகளாக விற்பனை செய்துவிட்டு, அதற்கு பாதை இல்லாததால் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பட்டா நிலத்தை அரசுக்கு சொந்தமான புறம்போக்கு நிலத்தை பேரூராட்சிக்கு மோசடியாக தானசெட்டில்மெண்ட் கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல. உண்மையில் நான் ச.எண்.226/8 ல் கிரையம் பெற்றிருந்தால், அதற்கு பாதை விட்டிருக்கப்பட்டிருக்கும் என்றும், அவ்வாறு மூல ஆவணம் எதுவும் பாதை இல்லாததால் 1 முதல் 5 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட பட்டா நிலத்தில்

பாதையாக காட்டி வாதிகளுக்கு விற்பனை செய்ததது செல்லாது என்றும், வாதிகள் அதன் அடிப்படையில் பாதை கோருவதும் செல்லாது என்றால் சரியல்ல. வாதிகளுக்கு ஆதரவாக இல்லாத ஆவணத்தில் அடிப்படையில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டுர்.